[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1979 ஏப்ரல் 17

நடவடிக்கை எடுக்கும் முறையில் வேறுபல இடங்களுக்கு மாற்று வதும், சிலரை டிஸ்மிஸ் செய்வதும் சுமுகமான பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இடையூறாக இருக்கும் என்பதை மனத்திற் கொண்டு அதை வாபஸ் பெற்று பேச்சுவார்த்தை நடத்த முயற்சிப் பார்களா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு விளக்கத்தை அவர்கள் கேள்வியாகக் கேட்டதற்கு நன்றி. இந்தச் சுற்றுலாத் துறை இயக்குநர் வெளிநாட்டிற்குச் சென்றபொழுது பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவாகி விட்டது என்று தொழிலாளர்கள் மத்தியில் அச்சிட்டுப் பரப்பப்பட்டு வந்திருக் கிறது. இந்திய சர்க்கார், இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் பயிற்சிக்காக இந்த அதிகாரிகளை அனுப்புகின்ற அந்தத் திட்டத் தின்படி, தமிழ் நாட்டிலிருந்து ஒரு அதிகாரி அனுப்பப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட செலவு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றதில், அதில் ஏற்பட்ட செலவு 20,305 ரூபாய். அதற்குப் பிறகு தூரக் கிழக்கு நாடுகளைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண் டால், சுற்றுலா பற்றிய கருத்தரங்கு ஹாங்காங்கிலே நடந்த பொழுது, தூரக் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி களைக் கவர வேண்டும், அவர்களிடத்தில் தொடர்பு கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் நம்முடைய சர்க்கார் அனுமதி யோடு அதிகாரி அனுப்பப்பட்டார். அதற்கு ஏற்பட்ட செலவு 32,619 ரூபாய். இது நான் நடைபெற்றது. ஆனால் அச்சடித்துத் தரப்பட்டிருக்கிற துண்டு அறிக்கையிலே இலட்சம் இலட்சமாகச் செலவழித்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

இரண்டாவது கேள்விக்கு விடை, நடவடிக்கை எடுக்கப்படு வது, அவர்கள் செய்த தவறுகளுக்காக அல்லது வேறு பல குற்றங் களுக்காக. அது தனியாக இருக்கிறது, விசாரிக்கப்படுகிறது. அவைகள் நிரூபிக்கப்பட்டால் தண்டனை கிடைக்கும், இல்லை யென்றால் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். எனவே, அதற்கும் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கும் சம்பந்தமில்லை, பேச்சுவார்த்தை தொடரலாம்.

(ஆ) இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றினை தமிழ் நாட்டில் நிறுவுவது குறித்து—

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அடுத்து, திருவாளர்கள் பி. எச். பாண்டியன், கே. பண்ணை சேதுராம் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பி. எச். பாண்டியன்.

1979 ஏப்ரல் 17]

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

''இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிரிவுகள் பல்வேறு மாநிலங்களில் இயங்க வேண்டுமென்று, உயர்நீதி மனறத் தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் தெரிவித்த கருத்திற்கிணங்க, ஒரு பிரிவை தமிழ்நாட்டில் நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து''.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்திய அரசியலைமப்புச் சட்டத்தின் 130-வது பிரிவின்படி, இந்தியாவின் உச்ச நீதிமன்றம், டில்லியிலோ அல்லது இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று இந்தியாவின் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக்கூடிய பிற இடத்திலோ அல்லது இடங்களிலோ அமைய வேண்டும். ''தென் மாநிலங்களில் இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் சர்க்யூட் பேராயம்'' (Circuit Bench) என்கிற பொருள், உயர்நீதி மனறத் தலைமை நீதிபதிகளின் 1979 ஆம் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்தது. இது குறித்து எடுத்துள்ள முடிவு பற்றி இதுவரையில் இந்த அரசு எந்தவிதத் தகவலையும் பெறவில்லை.

எனவே, இப்பொருள் பற்றி இந்த அவையில் விவாதிக்க எடுத்துக் கொள்வதற்கு இது உரிய தருணமல்ல என்று நான் கருதுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் இந்த உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவைப் பற்றி அவர்களுக்கு தகவல் இல்லை என்று சொன்னார்கள். இந்த ஆண்டில் நம்முடைய மாணபுமிகு முதலமைச்சரவர்கள் சென்னையிலே உள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தில் பேசுகின்ற பொழுது, தமிழ் மாநிலத்தில் உச்ச நீதிமன்றத்தின் பிரிவு அமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தையும், தமிழ் நாட்டு மக்களின் கருத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10–40.)

அதற்குப் பின்னால் பாராளுமன்றத்தில் இதே எண்ணத்தை, நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களும் எழுப்பினார்கள். அங்கே பதில் அளித்த சட்ட அமைச்சரவர்கள் இங்கே தமிழகத்

திலேயிருந்து, இந்த சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் ஒன்று அமைப்பதற்கு, தமிழக அரசிடமிருந்து எந்தவித பரிந்துரையும், குறிப்பாக, ''கான்கிரீட் ப்ரப்போசல்'', அதாவது அது குறித்து ஒரு எண்ணமும் கருத்தும் அரசிடமிருந்து வரவில்லையென்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால், அப்படி சொல்கின்ற நேரத்தில் பாராளுமன்றத்திலே, பதில் அளித்த சட்ட அமைச்சரவர்கள் தமிழக அரசிடமிருந்து பரிந்துரை வருமானால், நிச்சயமாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உச்ச நீதிமன்றத்தின் பிரிவை அமைப்பதற்கு அரசுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடில்லையென்று சொன்னார்கள். எனவே, நமது தமிழக அரசு இது குறித்து ஒரு ''கான்கிரீட் ப்ரப்போசல்'' மத்திய அரசுக்கு அனுப்புமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு முதல்வரவர்கள் இந்தப் பிரச்னையைப் பரிசீலித்து அதற்குத் தகுந்த அறிக்கையை டெல்லி சர்க்காருக்கு அனுப்ப இந்த அரசு முன்வரும்.

திரு. பி. எச். பாண்டியன் : இந்த உச்ச நீதிமன்றப் பிரிவை தென் மாநிலங்களில் அமைக்க வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டதன் காரணமே இங்கே தென் மாநிலங்களிலிருந்து உச்ச நீதிமன்றம் செல்லுகின்ற ஒவ்வொரு குடிமகனும் ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : கருத்தைச் சொல்லிவிடுகிறேன் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் சென்று நீதி தேட வேண்டியிருக்கிறது. குறிப்பாக, வட மாநிலங்களில் உள்ளவர்கள் அருகாமையிலேயே உச்ச நீதிமன்றத்தை அணுகுகிறார்கள். இந்த வேறுபாடு, பாகுபாடு இருக்கக் கூடாது என்பதற்காக, உச்ச நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றை இங்கே வைக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : இந்த வாதங்களை இந்த அரசு பரிசீலிக்கும்.